மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே நடைமுறையிலே இருக்கக்கூடிய திட்டங்களை மின் வாரிய நிதி நிலை அறிக்கையின்பொழுது விரிவாக நான் தெரிவித்திருக்கிறேன். அவை போக இன்னும் சுமார் 2,180 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் அளவுக்கு அனல் மின் நிலையங்கள் அமைப்பது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. தூத்துக்குடியில் மேலும் 710 மெகாவாட்; மேட்டூர் அனல் மின் திட்டத்தில் 210 மெகாவாட், வட சென்னையில் 630 மெகாவாட்; எண்ணூரில் 420 மெகாவாட்— அதாவது, இரண்டு 210 மெகாவாட்; பேசின் பிரிட்ஜில் 110 மெகாவாட் ஸ்டேஷனுக்கு நாம் ஏற்கனவே திட்டம் அனுப்பியிருக்கிறோம். அதையும் 210 மெகாவாட் ஸ்டேஷனாக மாற்றுவதென அரசு தீர்மானித்திருக்கிறது. ஆகையால் சுமார் 2,180 மெகாவாட் அளவிற்குக் கூடுதல் மின் உற்பத்தித் திட்டங்களை, அனல் மின் உற்பத்தித் திட்டங்களாகச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்திக்காக மட்டும் செலவுக்கு, நம்முடைய அரசு எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறது என்ற விவரத்தையும் அந்தத் தொகை முந்தைய அரசு ஒதுக்கியதைவிட எந்த அளவுக்கு அதிகம் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ரூ.1,022.8 கோடியில் ரூ. 572.3 கோடி மின்சார உற்பத்திக்கு— ஜெனரேஷனுக்கு என்று இந்த ஐந்தாண்டுகளில் செலவிடுவதாக இருக்கின்றோம். 1969—74, அதாவது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பார்க்கிற பொழுது, ரூ. 7 கோடிதான் மின் உற்பத்திக்காகச்செலவு செய்தார்கள்.

குமரி மாவட்ட கடலோர பகுதிகளில் மின் விளக்கு கம்பங்களை மரத்தினால் அமைத்தல்.

*வினா எண் 1028—திரு. டி. மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் கடலோர பகுதிகளிலுள்ள மின் விளக்குக் கம்பங்கள் சிமெண்டாலும், இரும்பாலும் அமைக்கப்படுவதால் அக்கம்பங்கள் உப்புக் காற்றுப்பட்டு விரைவில் பழுதடைந்து விடுவதை தடுக்க அப்பகுதியில் மரத்தால் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில் அது இந்த ஆண்டு நடைமுறைக்கு வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:—(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1981 மே 14]

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமாரி மாவட்டத்திலே, குறிப்பாக, நம்முடைய எல்லைப் பகுதியிலே நீரே டியிருந்து குமரி முனை வரையிலும், கடற்கரை பக்கத்திலே யிருக்கிற மின்கம்பங்கள் உப்புக் காற்று படுவதால் பழுதடைந்து, போதுமான வெளிச்சம் தருவதில்லை. ஆகையால் மொத்தமாக அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னாலும் ஏற்கனவே சுற்றுலாப் பகுதியாக இருக்கிற குமரி முனையிலும், பகவதி அம்மன் கோயிலுக்குப் பின்னால் இருக்கிற அந்தக் கம்பங்களிலும் விளக்குகள் எரிவதில்லை. எனவே, அந்தப் பகுதிகளிலாவது மரக் கம்பங்களை நட்டு, அலுமினியத்தால் செய்து போடப் பட்டிருக்கிற உறுப்புகளை மாற்றி, நிரந்தரமாக விளக்கு எரியக் கூடிய எற்பாட்டைச் செய்ய, மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடலோரப் பகுதியில் ஆர். சி. சி. கம்பங்களுக்குப் பதிலாக மரக் கம்பங்களைப் பயன்படுத்துவது என்பது நம்மைப் பொறுத்த வரையிலும் எளிதான காரியம் அல்ல. கேரளாவிலே இருப்பது போல் நமக்கு மரக் கம்பங்கள் கிடைப்பதில்லை. மேலும் ஆர்.சி.சி. கம்பங்கள் நல்ல முறையிலேதான் இருந்து வருகின்றன. விளக்கு எரியாததற்குக் கம்பங்கள் மட்டும் காரணம் அல்ல. அந்தக் கம்பங்களிலே ஏற்படுகிற ஈரப் பசை எல்லாம் கூட காரணமாக இருக்கக்கூடும். அவைகளையெல்லாம் தகுந்த பெயின்ட் அடிப்பதன்மூலம், தகுந்த பராமரிப்பின்மூலம் விளக்குகளை எரிய வைப்பதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, கம்பங்களை மாற்றுவது என்பது நடைமுறைக்கு ஏற்றதல்ல.

திரு. டி. மணி: தலைவரவர்களே, கடற்கரை முழுவதும் உள்ள கம்பங்களை மாற்றச் சொல்லவில்லை. குறிப்பாக நம்முடைய குமரி முனையிலே, சுற்றுலா கேந்திரமாக இருக்கக் கூடிய குமரி முனையிலே இப்படிப்பட்ட ஏற்பாட்டினை செய்வார் களா? ஏனென்றால் இரண்டு மாதங்களுக்கு முன்பு கூட அந்தப் பகவதி அம்மன் கோவில் பின் பகுதியில் ஒரு விளக்குகூட எரியாத நிலை இருந்தது. கேட்டால் இதைத்தான் சொல்லுகிறார்கள். உப்புக் காற்று பட்டு அதன் காரணமாகப் பழுதடைந்து விட்டது என்று. ஆகவே, அந்தப் பகுதியிலேயாவது தேக்குமரகம்பங்களை நட்டுஎன்னுடைய மாவட்டத்தில் நிறைய தேக்கு மரங்கள் கிடைக் கின்றன. அப்படி அந்த மரங்களைப் பயன்படுத்தி அதைச் சீர் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, குமரிப் பகுதியைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். நான் மின்வாரியத்திலே பணிபுரிகின்றபோது அங்கு இருந்திருக்கிறேன். அங்கே ஏற்கனவே மரக் கம்பங்கள் இருந்து அவைகள் உளுத்துப் போயின. அதை மாற்றுவதற்கும் வழியில்லை. ஆகையினாலே ஆர்.சி.சி. கம்பங்களைப் போட்டோம். அதை மீண்டும்

மாற்றி மரக் கம்பங்களைப் போட்டால் அது சில நாட்களிலே அதுவும் போய்விடுகிறது. அதைவிட கன்னியாகுமரிப் பகுதியில் காற்று மிக அதிகம். இந்தப் பகுதியிலே அன்டர் கிரவுண்டு சிஸ்டத்தை நாம் எந்த அளவுக்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு அரசு இதைப் பரிசீலனை செய்யும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இந்த மின்கம்பங்கள் எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை மாற்றப்பட வேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறது. நான் கேட்க விரும்புவதெல்லாம் இம்மாதம் 1-ந் தேதி திண்டுக்கல்லில் மின் கம்பத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, அந்தக் கம்பம் சாய்ந்து, அதிலே வேலை செய்து கொண்டிருந்த மின்தொழிலாளி இறந்துவிட்டார். எனவே எவ்வளவு காலத்திற்கு இந்தக் கம்பங்களுக்கு சக்தி இருக்கும். அப்படி என்றால் இதை மாற்றி அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆர். சி. சி. கம்பங்களைப் பொறுத்தவரையிலே லைன் இன்ஸ்பெக்ஷன் என்று ஆண்டுதோறும் போவார்கள். அப்படிப் போகும்போது விரிசல் மற்ற கீரல்கள் இருக்குமே யானால் அதைப் பார்த்து அவ்வப்போது மாற்றிவிடவேண்டும். எவ்வளவு காலம் என்று வரைமுறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதை அப்படிப்பார்த்து மாற்றிக்கொண்டே வருவோமானால் இந்தப் பிரச்சினை வராது. மரக் கம்பங்களைப் பொறுத்தவரையில் 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் என்று வரைமுறை உண்டு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 1029—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற ரப்பரைப் பயன்படுத்தி தமிழ்நாட்டிலுள்ள எல்லா போக்குவரத்துக் கழகங்களுக்கும் தேவையான புதுபித்த டயர்கள் மற்றும் ரப்பர் பஞ்சு இருக்கைகள் தயாரிப்பதற்கான ரப்பர் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி:—(அ) மற்றும (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள வெற்கிலாம் பியில் நூலிழை ரப்பர் உற்பத்தி செய்யும் தொழில் கூட்டுறவு சங்கம் ஒன்று 11-3-1981 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.